**டவர் மண்டப் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

டவர் மண்டப அரங்க மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான விதத்தில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் மன்றத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளும் பொறுப்பு, அப் பொறுப்பு ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், செயற்படு முறை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், செயற்படுமுறை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை

பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மீண்டும் வெளியிப்பட்டிருந்த 9 கணக்கு விடயங்கள் ஒப்பீடு சார்ந்த பெறுமதிகள் மற்றும் முன்னைய ஆண்டிற்கான பெறுமதி ரூபா 771,107,315 தொகையினால் மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த முன்னை ஆண்டிற்கான சீராக்கல்கள் சரியாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பந்தி 54 இன் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் அவ்வாறான மீண்டும் வெளியிடப்படும் ஒப்பீடு சார்ந்த பெறுமதிகள் விபரங்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நியமத்தின் விதி முறைகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண வகைகள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆண்டின் போது காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களில் தலைமை அலுவலகத்தின் காணி மற்றும் கட்டிடங்களில் மாத்திரம் முறையே ரூபா 614,000,000 தொகைக்கும் மற்றும் ரூபா 163,000,000 தொகைக்கும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 328,000,000 தொகை பெறுமதியான 02 காணிகள் மற்றும் ரூபா 400,360,931 தொகைக்கான 4 கட்டிடங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த மீள்மதிப்பீட்டு அலுவல்களுக்காக ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அரச பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தேவையான கோவைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதன்படி, 2022 ஜூன் 30 இற்கு முன்னர் இந்த மீள்மதிப்பீட்டை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். தலைமை அலுவலகம் எமக்கு சொந்தமான ஆதனம் ஒன்றாக காணப்பட்ட போதிலும் 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளமையால் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | நியமத்தின் விதிமுறைகளின் படி சொத்தொன்று உரித்தான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகைகள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் சொத்தொன்றின் நியாயமான பெறுமதி கணக்குகளில் சித்தரித்து காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படாமையால் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட ஆனால் மேலும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 34,833,215 தொகை கிரயத்தை உடைய 08 வாகனங்களின் பயன்தரு ஆயுட் காலம் தொடர்பாக மதிப்பீட்டு மீதி மீண்டும் கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். 2022 ஆண்டின் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நியமத்தின் விதிமுறைகளின் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 15 இன் பந்தி 14 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பாதீட்டு பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதி இடையே ஒப்பீடு ஒன்று உட்படுத்தி அல்லது பாதீட்டுப் பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதி இடையே காணப்படும் பொருண்மையான வித்தியாசங்களுக்கான காரணங்களை விளக்கியிருக்கவில்லை. | 2021 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமம் 15 இன் பந்தி 14 இன் படி நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நியமத்தின் விதிமுறைகளின் பிரகாரம் பாதீடு மற்றும் உள்ளவாறான பெறுமதி இடையே வித்தியாசங்களை ஒப்பீடு செய்வதற்கும் மற்றும் அதற்கான காரணங்களை விளக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2018 ஆண்டின் போது கல்வி அமைச்சினால் நன்கொடையாக வழங்கியிருந்த கப் வண்டி ஒன்றின் பெறுமதி 2019 ஜனவரி 01 திகதி கணக்கீடு செய்யும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்திகள் 25 மற்றும் 43 இன் பிரகாரம் சொத்துக்களை தனதாக்கிய திகதியில் காணப்பட்ட நியாயமான பெறுமதிக்கு பதிலாக 2017 ஆண்டில் காப்புறுதி அலுவல்களுக்காக பெறுமதி கணிக்கப்பட்ட பெறுமதி ரூபா 4,000,000 தொகை கிரயம் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அது அந்த ஆண்டின் போது அறிவு குறைவினால் ஏற்பட்ட வழு ஒன்றென ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தினால் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், அவை ஏப்ரல் இறுதி அளவில் பூர்த்தி செய்வதற்கு இயலுமாகும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை கடைபிடித்து சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 161,750,000 தொகை கிரயத்தையுடைய தலைமை அலுவலகக் கட்டிடம் மற்றும் ரூபா 1,250,000 தொகைக்கான ஒலிப்பதிவு கூடம் 2017 ஆண்டு முதல் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 16,300,000 தொகை மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 65,200,000 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 16,300,000 தொகை குறைவாக மற்றும் திரண்ட இலாபம் ரூபா 48,900,000 தொகை மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். எமக்குச் சொந்தமான ஆதனம் ஒன்றாக காணப்பட்ட போதிலும் 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்தமையால் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. எனினும், 2022 ஆண்டில் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பெறுமானத் தேய்வு கழிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செலவினை சரியாக இனங்கண்டு கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்பட்டிருக்காத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஒதுக்கம் | 79,091,701 | பல வருட காலமாக முன் கொண்டு வரப்பட்டிருக்கும் 05 கணக்கு மீதிகள் தொடர்பான தகவல்கள்/ கோவைகள்/ பதிவேடுகள் | டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஆரம்ப காலப் பகுதி முதல் அம் மீதிகள் கணக்கு ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. அந்த மீதிகளுக்கான ஆவணங்கள் ஏதும் அல்லது தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்ததுடன், சான்றுகள் ஏதும் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதென கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 இன் 1 ஆம் இலக்கங் கொண்ட டவர் மண்டப அரங்க மன்றச் சட்டத்தின் 8 ஆவது பிரிவு மற்றும் மன்றத்திற்கு சொந்தமான சௌசிரிபாய கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள தரைப்பகுதியை மன்றத்திற்கு உரித்தாக்கல் தொடர்பான 1980 ஒக்தோபர் 08 திகதிய விஷேட வழங்கல் பத்திரத்தின் விதி முறைகள் | இந்த காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் தேசிய நடன நடவடிக்கையை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு தேவையான கருமங்களுக்காக மாத்திரமன்றி வேறு கருமங்களுக்கு ஈடுபடுத்தக் கூடாது எனவும் அவ்வாறான கருமங்களுக்காக ஈடுபடுத்தப்படாவிடின் அப்போது அவை இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கு மீண்டும் உரித்தாக்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மற்றத்திற்கு சொந்தமான சௌசிரிபாய | சௌசிரிபாய கட்டிடம் தொடர்பாக காணப்பட்ட சிக்கல் நிலைமையினை தீர்ப்பதற்காக இரு தரப்பு உத்தியோகத்தர் மற்றும் பிரதமருடன் கலந்துரையாடப்பட்டதன் படி குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக அடுத்த நம்பிக்கை பொறுப்பு சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு மற்றும் விரைவாக நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள நிலப்பகுதி நிர்மாண வேலை அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.<br><br>மேற்கூறிய குத்தகை உடன்படிக்கை 2016 மே 15 திகதி முடிவடைந்திருந்ததுடன், அந்த அதிகார சபையினால் தொடர்ந்தும் அக்கட்டிடத்தில் தங்கியிருந்த போதிலும் 2016 மே 15 திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை குத்தகை ஏதும் மற்றத்திற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 13(8) | 2019 ஆண்டிற்கான நிதி அதிகார சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை நம்பிக்கை பொறுப்பு சபையினால் கவனம் செலுத்தி அதில் காணப்படும் விடயங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை கட்டங்களை 03 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். அடுத்த அறிக்கைக்கான பதில் 03 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 13(7)(ஏ) பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் விடயங்கள் தொடர்பாக எடுக்கத் திட்டமிட்டுள்ள கட்டங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டும். |
| (இ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவுகள் 20(1) மற்றும் 102 | மன்றம் 2018/ 2019 மற்றும் மற்றும் 2019/ 2020 வரி மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வருமான வரிக்காக பதிவு செய்வதற்கு அல்லது வரி விடுதலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | டபர் மண்டப அரங்க மன்றம் வரி விடுதலை நிறுவனம் ஒன்றாக காணப்படுவதுடன் அது தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வரி விடுதலை பெற்றுக்கொள்வதற்கு அல்லது வரிக்காக பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன கோவையின் அத்தியாயம் VIII பந்தி 6.1 | மன்றத்தின் ஊழியர்களுக்கு ஒரு மணித்தியாள மேலதிக நேர வேலை விகிதாசாரத்தை 1 மணித்தியாளத்திற்கு 1 ½ மணித்தியாளங்கள் என தீர்மானித்து அந்த வீதாசாரத்தின் மீது 2018 ஏப்ரல் 11 திகதிய 02/2016(ii) இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பந்தி 02(i)(அ) இற்கு முரணாக 2016 ஜனவரி 01 திகதி முதல் 2018 ஏப்ரல் 11 திகதி வரை நிலுவை மேலதிக வேலை கொடுப்பனவு என ரூபா 1,438,435 தொகை பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது 51 ஊழியர்களுக்கு 2019 மார்ச் 08 திகதி செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலுவை மேலதிக நேர கொடுப்பனவிற்காக 2019 மார்ச் 15 திகதி நம்பிக்கை பொறுப்பு சபையின் அணவல் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும் முகாமைத்துவ சேவைப் பணிப்பாளரினால் செலுத்தப்பட்ட நிலுவை மேலதிக நேர கொடுப்பனவை அங்கீகரிக்க மறுத்திருந்தது. | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் இந்த செலுத்தப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவிற்காக அங்கீகாரம் வழங்கப்படாமையால் செலுத்தப்பட்ட தொகை அறவிடப்பட்டு வருகின்றது. 2020.08.27 கடிதத்தின் மூலம் செப்தம்பர் மாதம் முதல் செலுத்தப்பட்டிருந்த நிலுவை மேலதிக நேர கொடுப்பனவு அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பதவியணியினரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2020.09.18 திகதிய கடித்தின் படி பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு ஒக்தோபர் மாதம் முதல் இது வரை தவணைகளாக செலுத்தப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவு அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. | தாபனக் கோவையின் விதிமுறைகளை மிகைத்த இவ்வாறான கொடுப்பனவுகள் நம்பிக்கை பொறுப்பு சபையின் மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணங்கள் 119(1), 119(2) மற்றும் 233 | அங்கீகாரம் இன்றி 51 ஊழியர்களுக்கு 2019 மார்ச் 08 திகதி செலுத்தப்பட்டிருந்த மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 1,438,435 தொகையினை மீண்டும் அறவீடு செய்தல் 2020 ஒக்தோபர் வரை தாமதப்படுத்தியிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அங்கீகாரம் இன்றி பிழையான முறையில் செலுத்தப்பட்டிருந்த மேலதிக நேர கொடுப்பனவு நிதிப் பிரமாணங்களின் படி அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டும் அறவீடு செய்யும் தவணைகளின் எண்ணிக்கை 12 ஐ மிகைக்குமாறு அறவீடு செய்வதற்கான அதிகாரம் அமைச்சுச் செயலாளருக்கு மாத்திரமே காணப்படுகின்ற போதிலும், அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்த மேலதிக நேர கொடுப்பனவினை 48 தவணைகளில் அறவீடு செய்வதற்காக பணிப்பாளர் நாயகம் அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 திகதி அளவில் 30 ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,027,596 தொகை மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 06 மாதங்களை மிகைத்துள்ள ரூபா 124,430 தொகை பெறுமதியான 15 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் 06 மாதங்களை கடந்துள்ள காசோலைகளை உடனடியாக வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 880 முதல் 893 வரை மற்றும் 612 ஆவது அதிகாரத்தின் மீதான அரச உத்தியோகத்தர்களுக்கான பிணைக் கட்டளைச் சட்டம் | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஆலோசனைகள் பெறுவதற்காக செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நிதிப் பிரமாணம் மற்றும் அரச பிணைக் கட்டளைச் சட்டத்தின் படி பிணை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஊ) 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் பீஈடீ-12 கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) பிரிவு 4.2.6 | 2020 காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் நம்பிக்கை பொறுப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்புச் சபைக் கூட்டங்கள் நடைபெறாமையால் நம்பிக்கை பெறுப்புச் சபையின் அங்கீகாரத்துடன், 2020 ஆண்டிற்கான பாதீடு சமர்ப்பித்தல் தாமதம் அடைந்திருந்ததென கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பிரிவுகள் 5.1.3 மற்றும 5.2.1 | 2020 பாதீடு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2021 ஜூலை 28 திகதியன்று சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், பாதீட்டுடன் பாதிப்பட்ட அகழ் விரிவான வருமானங்கள் கூற்று, பாதிடப்பட்ட நிதி நிலைமைக் கூற்று மற்றும் பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி எதிர் காலத்தில் தேவையான ஆவணங்களுடன் பாதீடு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கை விதிமுறைகளின் பிரகாரம் பாதீட்டுடன் ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) பிரிவு 6.5.1 | 2020 கணக்குகள் 2022 ஜனவரி 12 திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நம்பிக்கை பொறுப்பு சபைக் கூட்டங்கள் நடைபெறாமையால் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்துடன் 2020 கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தலில் தாமதம் ஏற்பட்டதுடன், 2022 ஆண்டு முதல் தாமதம் இன்றி சமர்ப்பிக்கப்படும் | சுற்றறிக்கை விதிமுறைகளின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | |
| | (iv) பிரிவு 6.5.3 | 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2022 ஜனவரி 31 திகதி அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2018 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 2019 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தற்போது அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கையின் விதிமுறைகளின் பிரகாரம் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (v) பிரிவு 7.3 | நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் மீது 1997 முதல் செயற்படுத்தப்பட்டிருந்த மற்றத்தின் கைநூலிற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் இணக்கம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | இது வரை கைநூலின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது திறைசேரியினால் அவ்வாறான கைநூல்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படாமையால் எதிர்காலத்தில் தாபனக் கோவை மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் படி மேற்கொள்ளப்படுகின்றதென கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | கைநூலிற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் இணக்கம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 04 | 2020 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதில் உட்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் திட்டம் பெறுகைத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், 2021 ஜூன் 28 திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2022 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கை விதிமுறைகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2008 திசெம்பர் 31 திகதிய 142 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரிவு 5.2(III) | 2020 ஆண்டின் போது 16 ஊழியர்களுக்கு ரூபா 250,000 வரையறையை மிகைத்து ரூபா 2,088,106 தொகை இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது. இடர் கடன் செலுத்துவதற்காக பாதீட்டின் மூலம் நம்பிக்கை பொறுப்பு சபை அங்கீகரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கை ரூபா 2,481,987 தொகையினால் மிகைக்குமாறு 2020 ஆண்டின் போது இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் இடர்கடன் தொகையின் உச்சமட்ட எல்லை ரூபா 250,000 தொகையுள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். பாதீட்டு தொகையை மிகைத்து செல்லாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கையின் விதிமுறைகளின் படி இடர் கடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2020 ஜூன் 10 திகதிய 07/2020(iii) இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | ஒரு வருடத்தில் 02 மாதாந்த தவணைகள் குறைவாக ஊழியர் கடன் அறவிடப்பட்டிருந்ததுடன் 2020 ஆண்டின் போது ரூபா 274,504 தொகை குறைவாக கடன் திருப்பி அறவிடப்பட்டிருந்தது. | விழா மாதம் ஒன்றாக காணப்பட்டமையால் நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரத்துடன் இடர்கடன் தவணை அறவிடப்படவில்லை எனவும் இனிமேல் அவ்வாறான தவறுகளை சரி செய்து இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் உரிய முறையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிலுவைத் தவணை தொடர்பாக நம்பிக்கை பொறுப்பு சபையின் அறிவுரையின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கருணையுடன் குறிப்பிடுகிறேன். | சுற்றறிக்கை விதிமுறைகளின் படி இடர்கடன் தொடர்ச்சியாக திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 96,531,981 இற்கான பற்றாக் குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 30,481,863 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 66,050,118 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. மீண்டுவரும் செலவுகளுக்கான அரச பங்களிப்பு ரூபா 13,400,000 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் மண்டப வாடகை வருமானம் ரூபா 13,199,166 தொகையினால் மற்றும் வட்டி வருமானம் ரூபா 1,428,658 இனால் குறைவடைதலும் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் ரூபா 4,726,839 இனால் மற்றும் பெறுமானத்தேய்வுச் செலவு ரூபா 57,554,889 தொகையினால் அதிகரித்தலும் இந்த பின்னடைவுக்கு முக்கியமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் 01 ஆம் இலக்க டவர் மண்டப அரங்க மன்ற சட்டத்தினை காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | சட்டம் காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 3,000 தொகையாக காணப்பட்ட கலைஞர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு 2019 மார்ச் 15 திகதிய 2019/294/03/01 இலக்கங் கொண்ட நம்பிக்கை பொறுப்பு சபை தீர்மானத்தின் மூலம் ரூபா 7,500 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக தேவையான மேலதிக பணம் பெற்றுக் கொள்வதற்கான திட்ட முறைமை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. இதன் காரணமாக ஜனாதிபதி நலன்புரி நிதியத்தின் வட்டி வருமானம் ரூபா 6,254,181 தொகையாக இருக்கும் போது கலைஞர்களுக்கு ரூபா 9,268,500 தொகை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தமையால் ரூபா 3,014,319 இற்கான நிலுவை தொகையை தீர்த்துக் கொள்வதற்காக வேறு வருமானம் | நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக பிரேரணை ஒன்று அல்லது நடவடிக்கை முறை ஒன்று அப்போதைய பணிப்பாளர் நாயத்தினால் சமர்ப்பித்திருக்காததுடன், அவ்வாறான பதிவுகள் ஏதும் நிறுவனத்திலும் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அப்போதைய பணிப்பாளர் சபை இந்த பிரேரணையை அரசியல் தலையீடு ஒன்றின் மூலம் அன்றி தெளிவான வேலைத் திட்டம் ஒன்றின் மீது அல்ல என குறிப்பிடுகின்றேன். இவ்வாறான முறைசாரா வேலைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளாமல் இருப்பதற்காக பொறுப்பாக இருப்போம். நிலையான வைப்பு வட்டி | நம்பிக்கை பொறுப்புச் சபை இவ்வாறான விவேகமற்ற தீர்மானங்கள் எடுப்பதில் இருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒன்றினை பயன்படுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | வருமானம் குறைவாக இருந்த போதிலும் முதிய கலைஞர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளது. கொடுப்பனவின் போது ஏற்படுகின்ற நிலுவைத் தொகை மன்றத்துக்கு சொந்தமான நிலையான வைப்பு வட்டி வருமானத்தின் மூலம் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்துக்கு சொந்தமான நாடக அரங்கு சலுவை விலையில் வழங்கள் தொடர்பாக கொள்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்காததுடன், அதற்காக பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு பின்னர் நம்பிக்கை பொறுப்புச் சபையின் அணவல் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது 10 சந்தர்ப்பங்களில் நாடக அரங்கு சலுவை விலையில் வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 789,000 தொகையும் மற்றும் 03 சந்தர்ப்பங்களில் கட்டணம் அறவீடு செய்யாமல் வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 252,500 இற்கான குத்தகை வருமானம் ஒன்றினை இழங்திருந்தது. | எதிர்காலத்தில் நாடகரங்கு சலுவை வாடகைக்கு வழங்கும் போது கொள்கை ஒன்றின் படி செயற்படுவதற்கும் அதற்காக பூர்வாங்க நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | நாடகரங்கு சலுவை விலையில் வழங்கள் தொடர்பாக கொள்கை ஒன்றினை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை செயல் நடவடிக்கை திட்டத்துக்கு இணங்க தயாரித்திருக்கவில்லை. செயலாற்றல் அறிக்கையின் பௌதீக முன்னேற்றம் காட்டப்படும் போது நெருங்கியிருந்த சதவீதம் மாத்திரம் காட்டப்பட்டிருந்ததுடன் பௌதீக இலக்கு மற்றும் பௌதீக முன்னேற்றம் அலகுகள் மூலம் காட்டப்பட்டிருக்காமையால் காட்டப்பட்டிருந்த செயலாற்றல் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | ஆண்டிற்கான செயலாற்றல் உட்பட 2021 அறிக்கை, செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது என கருணையுடன் குறிப்பிடுகின்றேன். | செயலாற்றல் அறிக்கை செயல் நடவடிக்கைத் திட்டத்துக்கு இணங்க, பௌதீக இலக்குகள் மற்றும் பௌதீக முன்னேற்றம் காட்டப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நாடகக் கீதம் உட்பட இறுவட்டு ஒன்று தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக 2018 -2020 ஆண்டுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 1,603,450 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது முறையே ரூபா 61,665 தொகை மற்றும் ரூபா 187,911 தொகையாக மொத்தம் ரூபா 249,576 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2022 ஜனவரி 31 திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டு இறுவெட்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாடகக் கீதம் பாட்டு அடங்கிய இருவெட்டு வெளியிடுதல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சிங்கள நாடகப் பிரதி தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தல் மற்றும் புகைப்படங்களை பாதுகாத்தல் மற்றும் காட்சிப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை திரித்துவதற்கு உரிய ஆரம்ப அலுவல்கள் முதல் அச்சிடுதல் வரை தேவையான அலுவல்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தில் காணப்படும் நிதிசார் நெருக்கடி காரணமாக குறிப்பிட்ட கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | திட்டமிட்டுள்ளவாறு செயற்திட்டத்தின் கருமங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 11 பதவிகள் தொடர்பாக 22 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 13 வெற்றிடங்கள் மன்றத்தின் தொழிநுட்ப பிரிவைச் சார்ந்த பதவியணிக்கு உள்ளவையாகும். முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுகளின் போது 21 ஆட்சேர்ப்புக்கள் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், உள்ளக ஆட்சேர்ப்பு 07 இல் 03 ஆட்சேர்ப்புகளுக்காக சபை அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. | அந்த உள்ளக ஆட்சேர்ப்பு 03 இற்கான அங்கீகாரம் பெறுவதற்காக 2020.02.12 திகதி மற்றும் 2020/295/03/37 நம்பிக்கை பொறுப்புச் சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் ஏற்பட்ட சிக்கல் தன்மையினால் 2015 ஆண்டின் பின்னர் மன்றத்தின் மேற்கொள்ளப்பட்டிருந்த நியமனங்கள் தொடர்பாக கண்டறிவதற்காக விசாரணை குழு ஒன்று நம்பிக்கை பொறுப்புச் சபையினால் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அக் குழுவினால் வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்புக்கள் வெளிப்படை தன்மையுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |